# திருவண்ணாமலை நகராட்சி
## சாதாரணக் கூட்டம்

**31.08.2021ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 5.00 மணிக்கு திருவண்ணாமலை நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நடைபெற்ற சாதாரணக் கூட்டப் பொருள் விபரம்.**

<table>
<tr><th>வ. எண்.</th><th>பொருள் விபரம்</th><th>குறிப்பு</th></tr>
<tr><td>1</td><td>இந்நகராட்சியின் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, இந்நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாம்களுக்கு 10 எண்ணிக்கையில் இரத்த அழுத்த பரிசோதனை கருவிகள் சப்ளை செய்யும் பணிக்கு 03.08.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் வருமாறு:
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.)</th><th>கொடுத்துள்ள விலைப்புள்ளி GST உட்பட (ரூ.)</th></tr>
<tr><td>1</td><td>அப்போலோ பார்மஸி<br>1ஜி, காந்தி நகர் 4வது தெரு<br>திருவண்ணாமலை</td><td rowspan="3">15,000</td><td>14,450</td></tr>
<tr><td>2</td><td>பிரித்திகா பார்மஸி<br>24/10 திருக்கோவிலூர் மெயின் ரோடு<br>திருவண்ணாமலை</td><td>17,000</td></tr>
<tr><td>3</td><td>சுகஸ்தலா மருத்துவமனை<br>திருவண்ணாமலை</td><td>19,450</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு :<br>
1. குறைந்த விலைப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள அப்போலோ பார்மஸி, திருவண்ணாமலை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழஙகியதை மன்றம் ஏற்கலாம்.<br>
கோப்பு எண்.எச்1/1343/2020</td><td>தீர்மானம் எண். 226<br>பொருள் எண்.226<br>அப்பல்லோ பார்மஸி<br>10 எண்ணம் BP Machine<br>அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>2</td><td>மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை அவர்களின் ந.க.எண்.135/செ.ம.தொ.அ./2021 நாள் 06.08.2021ம் தேதிய கடிதத்தின்படி தமிழக அரசின் 100 நாட்கள் சாதனை சிறப்பு மலர் வெளியிடுவதால் தினத்தந்தி நாளிதழ்க்கு திருவண்ணாமலை நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட</td><td>தீர்மானம் எண். 227<br>பொருள் எண்.227<br>தோராய செலவினம்</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>பணிகளின் விபரம் சிறப்பு மலரில் வெளியிட ஆகும் தோராய செலவினம் ரூ.25,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u><br>1. அனுமதி வழங்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.</td>
<td>ரூ.25,000/-<br>அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>3</td>
<td>திருவண்ணாமலை நகராட்சி 30.01.1896ம் ஆண்டு நகராட்சியாக தோற்றிவிக்கப்பட்டது. 01.04.1959ல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், 01.05.1974ல் முதல் நிலை நகராட்சியாகவும், 22.05.1998ல் தேர்வு நிலை நகராட்சியாகவும், 02.12.2008ல் சிறப்பு நிலை நகராட்சியாகவும், 13.64 சதுர கி.மீ. பரப்பளவில், 1,45,278 மக்கள் தொகையில் 39 வார்டுகளை கொண்ட நகரமாக விளங்கி வருகிறது. திருவண்ணாமலை நகராட்சி பழம்பெரும் ஆன்மீக தலமாகும். உலகப்புகழ்பெற்ற அண்ணாமலையார் மலையும் அதனை ஒட்டி அருணாசலேஸ்வரர் ஆலையமும் அமைந்துள்ளது. பஞ்சபூதங்களில் அக்னி (நெருப்பு) ஸ்தலமாக திருவண்ணாமலை திகழ்கிறது. இதனால் இந்நகரம் சிறந்த சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது. மேலும், இந்நகரில் ஒட்டியுள்ள கிராமங்களில் 2 எண்ணிக்கை மருத்துவக்கல்லூரி, 2 எண்ணிக்கை பொறியியல் கல்லூரி, 3 எண்ணிக்கை அறிவியல் கல்லூரிகளும் அமையப்பெற்றுள்ளது.<br><br>ஆண்டு தோறும் நடைபெறும் திருகார்த்திகை தீபம் சுமார் 20 லட்சம் பக்தர்களும் மற்றும் சித்திரை பௌர்ணமி தினத்தன்று 10 முதல் 12 லட்சம் பக்தர்கள் கிரிவலம் வருகின்றனர். மேலும், ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்று சுமார் 5 லட்சம் பக்தர்களும், ஒவ்வொரு தமிழ் மாத பிறப்பின்போது சுமார் 5000 பக்தர்களும் கிரிவலம் வருகின்றனர். எனவே இவ்வாறு பல சிறப்புகளை கொண்ட திருவண்ணாமலை நகரத்தினை விரிவுப்படுத்த கீழ்க்கண்ட ஊராட்சிகளை திருவண்ணாமலை நகராட்சியுடன் இணைத்து திருவண்ணாமலை நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தலாம்.
<table>
<tr><th>வ.எண்</th><th>கிராமத்தின் பெயர்</th><th>வ.எண்</th><th>கிராமத்தின் பெயர்</th></tr>
<tr><td>1</td><td>வேங்கிக்கால் (26)</td><td>12</td><td>கீழ்கச்சிராப்பட்டு (63)</td></tr>
<tr><td>2</td><td>இனாம் காரியந்தல் (27)</td><td>13</td><td>மேலத்திகான் (கீழ்அனைக்கரை) (123)</td></tr>
<tr><td>3</td><td>துர்க்கை நம்மியந்தல் (25)</td><td>14</td><td>சாவல்பூண்டி (47)</td></tr>
<tr><td>4</td><td>வட ஆண்டாப்பட்டு (72)</td><td>15</td><td>நல்லவன்பாளையம் (சமுத்திரம்) (46)</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண். 228<br>பொருள் எண்.228<br>மாநகராட்சி தரம் உயர்த்துதல் பிரேரணை அனுப்ப அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>5</td><td>கிளியாப்பட்டு (குன்னுமுருஞ்சி) (71)</td><td>16</td><td>கனந்தம்பூண்டி (38)</td></tr>
<tr><td>6</td><td>சின்னகாங்கயனூர் (பள்ளிக்கொண்டாப்பட்டு) (121)</td><td>17</td><td>ஆணாய்பிறந்தான் (35)</td></tr>
<tr><td>7</td><td>நல்லான்பிள்ளை பெற்றான் (151)</td><td>18</td><td>அத்தியந்தல் (34)</td></tr>
<tr><td>8</td><td>சோ.கீழ்நாச்சிப்பட்டு (69)</td><td>19</td><td>அடிஅண்ணாமலை (கோசாலை) (32)</td></tr>
<tr><td>9</td><td>நொச்சிமலை (68)</td><td>20</td><td>தேவனந்தல் (31)</td></tr>
<tr><td>10</td><td>ஏந்தல் (கீழ்நாத்தூர்) (122)</td><td>21</td><td>ஆடையூர் (29)</td></tr>
<tr><td>11</td><td>தென்மாத்தூர் (சே.கீழ்நாச்சிப்பட்டு) (124)</td><td>22</td><td>அண்ணாமலையா மலை மற்றும் பாதுகாக்கப்பட்ட காடுகள் (85)</td></tr>
</table>
எனவே, திருவண்ணாமலை நகராட்சியுடன் 22 ஊராட்சிகளை ஒருங்கிணைத்து திருவண்ணாமலை நகராட்சியினை திருவண்ணாமலை மாநகராட்சியாக தரம் உயர்த்திட அரசிற்கு உரிய முன்மொழிவுகள் அனுப்பலாம்.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
கோப்பு எண். 2936/2017 /எப்1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>4</td>
<td>திருவண்ணாமலை நகராட்சி குடும்ப நல IPP–V திட்டத்தின் கீழ் நகர சுகாதார செவிலியராகப் பணிப்புரியும் 10 பணியாளர்களுக்கு சீருடை 2020–2021 ஆம் ஆண்டிற்கு ஒரு நபருக்கு ரூ.2000/– வீதம் 10 நபர்களுக்கு மொத்த தொகை ரூ.20,000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. அரசாணை எண்.306 நாள் 13.10.2017<br>
(ந.க.எண்.1262/2019/எச்3)</td>
<td>தீர்மானம் எண். 229<br>பொருள் எண்.229<br>செவிலியர் சீருடை ரூ.20,000/-<br>அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>5</td>
<td>இந்நகராட்சியில் 2019–20 நிதியாண்டில் 14–வது மத்திய நிதிக்குழு மான்யத் தொகையில் ரூ.442.77 லட்சம் மதிப்பீட்டில் 13 எண்ணிக்கை சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான மான்யத் தொகை முழுவதும் பெறப்பட்டு முடிக்கப்பட்ட 10 எண்ணிக்கை பணிகளுக்கான தொகை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது</td>
<td>தீர்மானம் எண். 230<br>பொருள் எண்.230<br>14-வது நிதி பணியினை 15-வது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | முடிவுற்றுள்ள நபிகள் நாயகம் தெருவில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கான தொகை ரூ.28,21,880/- வழங்குவதற்கு 14-வது மத்திய நிதிக்குழு திட்டத்திலிருந்து மேற்கொள்ளும் பணிக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. 15-வது மத்திய நிதிக்குழு மான்ய வங்கிக் கணக்கிலிருந்து தொகை வழங்கலாம். வருவாய் நிதியில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலான உடன் தொகையினை 15வது மத்திய நிதிக்குழு மான்ய வங்கிக் கணக்கிற்கு மாற்றம் செய்யலாம். நிதி நெருக்கடி கருதி பேரிடர் காலம் என்பதால் பணி செய்த தொகையை 15வது மத்திய நிதிக் தொகை வரப்பெற்றதிலிருந்து அளிக்கவும் வரிவசூல் செய்யப்பட்டு ஈடு செய்து கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.63 / 2020 /இ1) | **நிதியிலிருந்து செலுத்த ஒப்புதல் வழங்க அனுமதிக்கலாம்.** |
| **6** | இந்நகராட்சியில் 2019-20 நிதியாண்டில் 14-வது மத்திய நிதிக்குழு மான்யத் தொகையில் ரூ.442.77 லட்சம் மதிப்பீட்டில் 13 எண்ணிக்கை சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான மான்யத் தொகை முழுவதும் பெறப்பட்டு முடிக்கப்பட்ட 10 எண்ணிக்கை பணிகளுக்கான தொகை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது முடிவுற்றுள்ள பாரதியார் நகரில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கான தொகை ரூ.27,83,961/- வழங்குவதற்கு 14-வது மத்திய நிதிக்குழு திட்டத்திலிருந்து மேற்கொள்ளும் பணிக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. 15-வது மத்திய நிதிக்குழு மான்ய வங்கிக் கணக்கிலிருந்து தொகை வழங்கலாம். வருவாய் நிதியில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலான உடன் தொகையினை 15வது மத்திய நிதிக்குழு மான்ய வங்கிக் கணக்கிற்கு மாற்றம் செய்யலாம். நிதி நெருக்கடி கருதி பேரிடர் காலம் என்பதால் பணி செய்த தொகையை 15வது மத்திய நிதிக் தொகை வரப்பெற்றதிலிருந்து அளிக்கவும் வரிவசூல் செய்யப்பட்டு ஈடு செய்து கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.63 / 2020 /இ1) | **தீர்மானம் எண். 231 பொருள் எண்.231 14-வது நிதியில் மேற்கொண்ட பணிக்கான தொகை செலவழித்து விட்டதால் 15 ஆவது நிதிக்குழு தொகை விடுவிக்க அனுமதிக்கலாம்.** |
| **7** | திருவண்ணாமலை நகராட்சியின் எல்லைக்குட்பட்ட வ.உ.சி. நகர் திருவண்ணாமலை திரு.எ.சிவராமன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.17512/2021 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வாதாட திரு.லூர்துபால் மௌரியா, வழக்கறிஞர் நியமிக்கவும், வழக்கின் செலவிற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:** | **தீர்மானம் எண். 232 பொருள் எண்.232 வழக்கறிஞரை நியமிக்க அனுமதிக்கலாம்.** |

| | | |
|---|---|---|
| | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வருவாய் நிதியில் செலவு மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3001/2021/எப்1) | |

**ஆணையாளர்,**
**திருவண்ணாமலை நகராட்சி.**